<u>**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**</u>

O.S.No. 29/2021 தேதி- 01.09.2025
(P.W.1) - ராஜேந்திரன்

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.25/2020 வழக்கில் பி.வா.சா. 1 -ஆக விசாரிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் மாதம் வாடகை ரூ.9000/- மற்றும் முன்பணம் ரூ.5 லட்சம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. மாத வாடகை ரூ.7000/- என்று சாட்சியம் அளித்துள்ளேன். என் முதல் விசாரனையில் ஒருவர் மாத வாடகை ரூ.9000/- மற்றும் முன்பணம் ரூ.5 லட்சம் தர தயாராக முன்வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3-ஆம் நபர் மேற்சொன்ன தொகையை செலுத்த தயாராக இருந்தார். மேற்சொன்ன சங்கதிகயை நிரூபிக்க ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யமாலும் எந்தவித அடிப்படை முகாந்தரமும் இல்லாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் முதல் விசாரனையில் ரூ.10,000/- ற்கு மேல் ஏலம் எடுக்க தயாராக உள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் தேவாலயத்தின் 3-ஆம் நபர்களும் கேட்டார்கள். நான் சொல்வது முழுக்க முழுக்க பொய்யான சங்கதி என்றால் சரியல்ல.

2. நான் பிரதிவாதியை கஷ்ட, நஷ்டபடுத்த வேண்டும் என்று பி.வா.சா.ஆ. 1-ல் ரூ.5000/- என்றும், அதன்பிறகு வா.சா.ஆ.2 -ல் ரூ.7000/- என்றும், அசல் வழக்கு எண்.25/2020 வழக்கில் ரூ.9000/- என்றும் இந்த வழக்கில் ரூ.10000/- என்றும் முன்னுக்கு பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் உள்ள பிரதிவாதியையும் அவருடைய குடும்பத்தையும் அசல் வழக்கு எண்.25/2020 என்ற வழக்கை தாக்கல் செய்ததால் பங்கு பேரவையில் இருந்து நீக்குவதாக தீர்மானம் போடப்பட்டு சபையில் வாசிக்கப்பட்டது என்றால் தீர்மானம் மட்டும் போடப்பட்டது. மேற்சொன்ன தீர்மானத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய முடியும். இவ்வழக்கு தாக்கல் செய்யும் முன் பேராலயத்தில் அனுமதி வாங்கியுள்ளோமா என்றால் வாங்கியுள்ளோம். மேற்சொன்ன அனுமதி எந்த தேதியில் பெறப்பட்டது என்று நினைவுள்ளதா என்றால் நினைவில்லை. மேற்சொன்ன முன் அனுமதி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

3. இவ்வழக்கில் இதே பரிகாரம் கேட்டு ஒரு எதிர் கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றாலும் அவ்வாறு ஒரே பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி அக்டோபர் மாதம் 2019 முதல் ஜனவரி மாதம் 2020-ஆம் ஆண்டு வரை பிரதிவாதி வாடகை பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. வாடகை பணம் பாக்கி பற்றிய விவரம் பொருளாரிடம் கேட்டால் தான் தெரியுமா என்றால் துணை தலைவருக்கும் தெரியும். அந்த காலத்தில் ரசீது ஏதும் வழங்ககப்படாததால் தொடர்ந்து வாடகை பணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தின்படி முன்பணம் மற்றும் வாடகை பணத்தை செலுத்த தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் ஏதும் கிடைக்கதக்கதல்ல என்றாலும் வழக்கு பிரதிவாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.